Ban on the export of gur and khandsari sugar

***142.** *Q*.—Thiruvalargal N. R. THIAGARAJAN and K. RAMADASS: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether the State Government requested the Union Government to permit the ban on the export of gur and kandsari to other States from Tamil Nad ;

(*b*) if so, the reply sent by the Central Government ; and

(*c*) when this ban will come into force ?

வெல்லம், நாட்டுச் சர்க்கரை

திருவாளர்கள் என். ஆர். தியாகராஜன், கே. ராமதாஸ் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்திலிருந்து வெல்லம், நாட்டுச் சர்க்கரை ஆகியவற்றை வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடைசெய்ய மத்திய சர்க்கார் அனுமதியை தமிழக சர்க்கார் கேட்டதா?

(இ) ஆமெனில், மத்திய சர்க்காரின் பதில் என்ன?

(உ) எப்பொழுதிலிருந்து இத்தடை அமுலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) வெல்லம், நாட்டுச் சர்க்கரை (**khandsari**) இவற்றின் விலைகள் ஏற்கனவே இறங்கியிருப்பதால், இன்னும் சற்று காலத்திற்கு நிலைமையைக் கூர்ந்து கவனிக்கலாமென இந்திய அரசு கருத்து தெரிவித்துள்ளது.

(உ) இவ்வினா எழவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, தமிழகத்திலிருந்து வெல்லம், நாட்டுச் சர்க்கரை, வெளி ராஜ்யங்களுக்கு போகக்கூடாது என்று தடை போடுவது ரெயில் மூலமாகவா, லாரி மூலமாகவா அல்லது தலைச் சுமை மூலமாகவா? ரெயில் மூலமாகச் செல்வதை எப்படி தடை செய்யப் போகிறார்கள்.?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, இது சம்பந்தமாக ஒரு வழக்கு உயர் நீதி மன்றத்தில் இருப்பதால் இதைப் பற்றி மேற்கொண்டு கேள்விகள் கேட்கவேண்டாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

Sale of fish

***143** *Q.*—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the places in Tamil Nad where fish is sold by the Fisheries Department ;

(*b*) the price at which fish is sold ; and

(*c*) whether fish is sold only to the customers ?

மீன் விற்பனை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மீன் இலாகாவினரால் தமிழகத்தில் எங்கெங்கு மீன் விற்பனை செய்யப்படுகின்றது?